1969 பிப்ரவரி 24]

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, கடலில் கொட்டவிருக்கும் எரி சாம்பலை தனியார் செங்கல் சூளைக்கு உபயோகிக்க இந்தச் சாம்பலைக் கேட்டால், அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அதைப் பற்றிப் பரிசிலிக்கலாம்.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இந்த எரி சாம்பல் விவசாயத்திற்கு உபயோகப்படுமா? அது நேரிடையாக இல்லாவிட்டாலும் வேறு ஏதாவது பொருள்களோடு கலந்து விவசாயத்திற்கு என்று விநியோகிக்க, சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அது விவசாயத்திற்குப் பயன்படாது என்பதுதான் இப்பொழுது உள்ள கருத்து.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் அனல் மின்சார திட்டத்திற்கு வெளி நாட்டு உதவிகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) புகளூர் சர்க்கரை ஆலையில் வேலைநிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்:—

"பாரி கம்பெனி நிர்வாகத்தின் கீழ் உள்ள புகளூர் சர்க்கரை ஆலையில் கடந்த ஜனவரி மாதம் 22-ம் தேதியிலிருந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தை சுமுகமாக முடித்து வைப்பதற்கு லேபர் கமிஷனர் தொடர்ந்து எடுத்து வரும் சமரச முயற்சிகளுக்கு மேற்படி பாரி கம்பெனி நிர்வாகிகள் உடன்படாத காரணத்தால் சுமார் 1,000 தொழிலாளர்கள், அந்தப் பிரதேசத்திலுள்ள கரும்பு உற்பத்தியாளர்கள், நூற்றுக்கணக்கான கரும்பு வெட்டும் கூலியாட்கள், கரும்பை ஏற்றிச் செல்லும் வண்டிக்காரர்கள் அனைவரும் ஒருமாத காலத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சர்க்கரைக்குத் தட்டு ஏற்பட்டுள்ள இக்காலத்தில், இதுவரை சுமார் 4,200 டன்கள் சர்க்கரை உற்பத்தியும் தடைபட்டுள்ள மோசமான நிலையைக் குறித்து விவாதிக்க இம்மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு கோருகிறேன்.

ஆலைகளில் வேலை நிறுத்தம் கதவடைப்பு பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் கொண்டு வரக்கூடாது என்று முன்பு கொடுத்திருக்கும் தீர்ப்புகளுக்கு ஒப்ப, இந்த தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயணா மில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

" அண்மையில் பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயணா மில்ஸ் மானேஜிங் ஏஜண்ட் திடீர் என்று மில்லை மூடிவிட்டதால், 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடவேண்டிய அபாய நிலையில் உள்ளார்கள். இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடையும் நிலைமையைப் போக்கவும், பாதுகாக்கவும் அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த இப்பிரச்சினையை சபை விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒரு மணி நேரம் ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அவையில் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்பதற்கொப்ப, அப்படிப்பட்ட விஷயங்களுக்கு இந்த அவையைப் பயன்படுத்தக்கூடாது என்கிற தீர்ப்புகளுக்கு ஏற்ப, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) பம்பாய் மாநகரில் சிவசேனையினரால் தமிழர் நலன் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, திரு. இராமமூர்த்தி, திரு. கோதண்டராமன், இவர்கள் ஒரு பொருள் பற்றி ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள்,

" The business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the need to urge the Central Government to give adequate protection to South Indians in Maharashtra State against the Siva Sena menace which has recently taken a heavy toll of human lives in the City of Bombay."

என்றும், திரு. க. இராமமூர்த்தி அவர்கள்,

" That this House shall stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the disturbances by the people of the 'Siva Sena' movement in the City of Bombay which was aimed to result in monetary loss to the people of Tamil origin in the City of Bombay and also to result in insecurity to their lives and residence."

என்றும், திரு. கோதண்டராமன் அவர்கள்,

" சிவ சேனையினர் தாக்குதலுக்குத் தமிழர்கள் ஆளாகிப் பலர் மாண்டு மடிந்துள்ளதால், இது விஷயமாக விவாதிக்க